சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : OS:139/2021

2022ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17ம் நாள் வாதி தரப்பு 1வது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எம்.ரைஹானா பேகம் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் இருளாயிஅம்மாள் | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

17.08.2022

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1ம் சாட்சி. என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதை படிக்க கேட்டு கைரேகை செய்துள்ளேன். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். தாவா சொத்திற்கு பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆகும். வாதிக்க பிரதிவாதி எழுதிகொடுத்த அடமான கடன் பத்திரம் அசல் வா.சா.ஆ.2 ஆகும். வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகும். வாதி அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.4 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.